මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/NSLE/103/DMD/09/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026-01-22

**வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை 08/2025 (iii)**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செளலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட திடீர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீட்டெடுத்தல் பற்றிய 2025.12.05 ஆந் திகதிய 08/2025 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை மற்றும் அது தொடர்பாக வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் முன்மொழியப்பட்ட வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மிகவும் திறம்பட மேம்படுத்துவதற்காக, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் அனர்த்தத்தினால் தடைபட்ட வணிகங்களுக்கு நிவாரணம் வழங்குவதனை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02. இதற்கமைவாக, 08/2025 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையிலுள்ள அட்டவணையின் உப பிரிவு 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளை மிகவும் திறமையாகவும் திறம்படவும் செயற்படுத்த பின்வரும் தெளிவுபடுத்தல்கள் மற்றும் திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

| தொடர் இல. | | நிவாரணம் | கொடுப்பனவு |
|---|---|---|---|
| 8 | | அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வணிகங்களை மீண்டும் தொடங்க ஏற்ற வகையில் அவற்றை மீட்டெடுப்பதற்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு | |
| | 8.1 | கைத்தொழில் அமைச்சில் பதிவுசெய்த தனிநபர், சிறிய மற்றும் நுண் தொழில்முயற்சிகளுக்கு. | அலகொன்றுக்கு ரூபா 200,000/- |
| | 8.2 | பிரதேச செயலகங்களில் பதிவுசெய்த தனிநபர், சிறிய மற்றும் நுண் தொழில்முயற்சிகளுக்கு. | அலகொன்றுக்கு ரூபா 200,000/- |
| | 8.3 | நிரந்தர கட்டிடத்தில் வீட்டு அடிப்படையில் இயங்கும் பதிவு செய்யப்படாத வணிக தொழில்முயற்சிகளுக்கு. | அலகொன்றுக்கு ரூபா 50,000/- |
| | 8.4 | பதிவு செய்யப்படாத உற்பத்தித் தொழில்கள் மற்றும் பசுமை இல்லங்கள் போன்றவற்றுக்கு. | அலகொன்றுக்கு ரூபா 50,000/- |
| | 8.5 | பாதசாரிகள் மற்றும் நடமாடும் வியாபாரம் புரியும் உள்ளிட்ட தற்காலிக வர்த்தகங்களுக்கு | அலகொன்றுக்கு ரூபா 25,000/- |

03. இங்கு, பிரிவுகள் 8.1 மற்றும் 8.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள **ஒவ்வொரு வணிக அலகுக்கும்** ஒரு கொடுப்பனவை மட்டுமே பெற முடியும்.

04. மேலே உள்ள பிரிவுகள் 8.3, 8.4 மற்றும் 8.5 இன் கீழுள்ள கொடுப்பனவுகளில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பெற **ஒரு பயனாளி** தகுதி பெற்றிருந்தால், அந்த பிரிவுகள் ஒவ்வொன்றின் கீழும் ஒரு கொடுப்பனவை மட்டுமே கோர வேண்டும். தேவையான நிதி ஏற்பாடுகள் பாதுகாப்பு அமைச்சிற்கான செலவினத் தலைப்பு இல. 103 இன் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், பணம் செலுத்துதல்கள் பிரதேச செயலகங்கள் மூலம் செய்யப்படும்.

05. வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 08/2025 மற்றும் 08/2025 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே இருக்கும்.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
திறைசேரியின் செயலாளர்

பிரதி:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
5. செயலாளர், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
6. கணக்காய்வாளர் நாயகம்